Case No.DVC 1/2018 PW1 சண்முகப்பிரியா Date : 03.08.2018

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது

முதல் விசாரணை தொடர்ச்சி

நானும் எனது கணவரும் திருமணம் ஆன நாள் முதல் தனிக்குடித்தனம் நடித்தி வந்தோம் என்றால் கூட்டுக் குடும்பமாக குடியிருந்து வந்தோம். எதிர்மனுதாரரின் பெற்றோர் இறந்துவிட்டார்கள் என்றால் தற்போதுதான் இறந்தார்கள். யார் யாருடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்துவந்தோம் என்றால் எனது கணவரின் பெற்றோர் மற்றும் அவரது சகோதரர் ஆகியோருடன் வாழ்ந்துவந்தோம். எனது கணவரின் சகோதரர் மற்றும் அவரது மனைவி மற்றும் எனது கணவரின் சகோதரி என்னுடன் பேசமாட்டார்கள் என்றால் இல்லறம் நடத்தி வந்தபோது பேசினார்கள் தற்போது பேசவில்லை. எனது கணவரின் சகோதரி என்னை பார்க்க வரமாட்டார்கள் என்று சொன்னால் நாங்கள் கூட்டுக்குடும்பாக வாழ்ந்த போது வருவார்கள். திருமணத்தின் போது எனது கணவர் நகையோ, பணமோ சீராக கேட்கவில்லை என்றால் கேட்டார்கள். திருமணத்தின்போது நான் மனநிலை சரியில்லாமல் இருந்தேன் என்றால் அது பொய். திருமணத்தன்று இரவு எனக்கும் எனது கணவருக்கும் எவ்வித சடங்கும் நடைபெறவில்லை என்றாலும் நான் சாமி வந்ததுபோல் ஆடினேன் என்று சொன்னால் அது அனைத்தும் பொய். எனது கணவர் திருமணம் முடிந்து என்னுடன் சந்தோஷமாகத்தான் இல்லறம் நடத்தினார் என்றால் சரிதான். எனக்கு மனநிலை சரியில்லை என்றாலும், அதனால் எனது கணவருடன் அடிக்கடி சண்டை செய்வேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் வீட்டைவிட்டு வெளியே சென்று வெகு நேரம் கழித்துதான் வீட்டிற்கு வருவேன் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. நான் கூட்டுக்குடும்பாக எவ்வளவு காலம் வாழ்ந்துவந்தோம் என்றால் திருமணம் முடித்து 5, 6 மாதங்கள் நான் எனது கணவருடன் கூட்டுக்குடும்பத்தில் வாழ்ந்துவந்தேன். அதன்பின்பு என்னை என் பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டார்கள். எனது பெற்றோர் வீடு எனது கணவரின் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது கணவருடன்

அடிக்கடி சண்டை செய்துவிட்டு எனது அம்மாவீட்டிற்கு சென்றுவிடுவேன் என்றால் அவ்வாறு இல்லை. நான் மனநிலை சரியில்லாதத குறித்து மருத்துவரிடம் சிகிச்சை பெற்றேன் என்றால் நான் நல்ல மனநிலையில் இருப்பதால் சிகிச்சை பெறவில்லை. நான் மனநிலை சரியில்லாதவர் என்றாலும், நான் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எனக்கு திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 01.07.2015 அன்று நடைபெற்றது. திருமணத்தின் போது எனது கணவர் என்னை எவ்வித கொடுமையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான்தான் எனது கணவருடன் பிரச்சனை செய்து வீட்டில் வேலை எதுவும் செய்யாமல் எனது பெற்றோர் வீட்டில் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எவ்வித காரணமும் இல்லாமல் எனது கணவரைவிட்டு நான் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் அவ்வாறு இல்லை. எனது கணவர் என்னுடன் தற்போதும் வாழ பிரியமாக இருக்கிறார் என்றாலும், நான்தான் அவருடன் வாழ பிரியமில்லாமல் இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. குடும்ப பெரியவர்கள் மூலம் எனது கணவர் தரப்பில் சமாதானம் பேசப்பட்டு நான் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் அவ்வாறு இல்லை எங்கள் தரப்பில்தான் சமாதானம் பேசப்பட்டது. ஆனால் எனது கணவர் வாழ வரமறுத்துவிட்டார். எனது கணவர் நான் அவருடன் சேர்ந்து வராத காரணத்தினால் விவாகரத்து மனு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் மதுராகோட்ஸ் மில்லில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் நிரந்தர பணியின் அடிப்படையில்தான் பணிபுரிந்து வருகிறார். எனது கணவருக்கு நாள் ஒன்றுக்கு வேலை செய்தால் ரூ.200/= சம்பளம் கிடைக்கும் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. அவர் மாதம் ரூ.11000/=சம்பளம் பெற்று வருகிறார். எனது கணவர் என்னைவிட்டு பிரிந்து வாழ்வதால் சரியாக வேலைக்கு செல்லாமல் மனதளவில் துயரப்பட்டு வருகிறார் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. எனது கணவரை கஷ்டப்படுத்தவேண்டும் என்பதற்காக பொய்யான காரணங்களுடன்

இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு மனநிலை சரியல்லாத விபரத்தை மறைத்து எனது பெற்றோர் எனக்கு திருமணம் முடித்து வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இம்மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் உறவினர்கள் என்னை கொடுமை செய்யவில்லை என்றால் அவ்வாறு இல்லை, அவர்கள் எனது கணவரிடன் ஆலோசனை கூறி என்னை கொடுமை செய்தார்கள். எனது கணவரின் உறவினர்கள் என்ன கொடுமைசெய்தார்கள் எப்போது கொடுமை செய்தார்கள் என்ற விபரங்களை குறிப்பிடவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். நான் எனது பெற்றோரின் பராமரிப்பில் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். நான் வாடகை வீட்டில் தனியாக குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எனது பெற்றோரின் பராமரிப்பில் இருப்பதால் மனுவில் கண்ட பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் என்னை கொடுமை செய்யவில்லை என்று சொன்னால் உறவினர்களின் பேச்சை கேட்டுக்கொண்டு என்னை வீட்டைவிட்டு அனுப்பிவிட்டார். அது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் மாவட்டகாவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். அவ்வாறு நான் கொடுத்த மனுவின் நகலை இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவரின் சகோதர, சகோதரிகள் மனரீதியாக என்னை கொடுமை செய்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளது, எவ்வாறு கொடுமை செய்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு கூறியுள்ளேன். எனது மாமியார் இறந்தபோது நான் எனது கணவரின் வீட்டிற்கு சென்றபோது அவர்கள் என்னை அடிக்கவந்தார்கள். மனஉலைச்சல், மனவேதனை எதனால் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் வசதி குறைந்தவர் என்றாலும், சரியாக வேலை பார்க்கவில்லை என்றாலும், நான் மனுவில் கோரியுள்ள பொருளுதவி அதிகமான

தொகை என்றாலும் சரியல்ல. எனக்கு திருமணத்தின் போது 5 பவுன் நகையும், ரூ.10000/= ரொக்கம் கொடுத்ததாக அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மனுவில் 15 பவுன் தங்கநகையும், ரூ.50000/= ரொக்கமும், ரூ.20000/= பண்டபாத்திரமும் கொடுத்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரரின் மாத சம்பளத்தை காட்டக்கூடிய ஆவணத்தையும் அவருக்கு உரிமையான சொத்துக்களை காட்டக்கூடிய ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மனுவில் எனது கணவர் மாதம் ரூ.35000/=ற்கு மேல் சம்பளம் வாங்குவதாக நான் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் கணவர் மீது வரதட்சணை கொடுமை செய்ததாக புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது கணவரைவிட்டு எவ்வளவு காலம் பிரிந்து வாழ்கிறேன் என்றால் இரண்டு வருடமாக பிரிந்து வாழ்ந்துவருகிறேன். நான் இரண்டு வருட காலமாக எனது பெற்றோர் வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்துவருகிறேன் என்றால் அவ்வாறு இல்லை. நான் தையல் தொழில் செய்து வருவதன் மூலம் எனக்கு நல்ல வருமானம் கிடைத்து வருவதால் இரண்டு வருட காலம் நான் எவ்வித பொருளுதவி கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர் வீட்டிற்கு நான் எனது விருப்பத்தின்பேரில்தான் சென்றுள்ளேன் என்றாலும், எனது கணவர் விரட்டியதாக பொய்யாக கூறிகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோரின் பொருளாதார சூழ்நிலையை அனுசரித்து எனது கணவர் என்னுடன் வாழ்ந்து வந்தார் என்றால் அவ்வாறு இல்லை. இருசக்கர வாகனம் வேண்டும் என்று கேட்டார். எனது குழந்தையை பார்க்கவந்தபோது நானும் எனது பெற்றோரும் அவரிடம் சண்டை செய்தோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு கடன் உள்ளதா என்றால் எனது திருமணத்தின் போது வாங்கிய கடன் உள்ளது. நான் எனது கணவருக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால்

அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக புகார் கொடுத்தேன். அவ்வாறு நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும், மனுவிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றாலும் சரியல்ல.

// உண்மை நகல்//

ஓம்/வே.முரளிதரன்,
நீதித்துறை நடுவர்,
அம்பாசமுத்திரம்